**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 328 of 2025

Depositions of PW -2 witness for ________ { Prosecution / Defence / Court

Name : சந்திரசேகரன்

Father's Name : கிருஷ்ணசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் இடுவாய் பாரதிபுரத்தில் குடியிருந்து கொண்டு தனியார் நிறுவனத்தில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த அய்யம்மாள் எனது அண்ணனின் மனைவி. கடந்த 22.05.2022-ம் தேதி காலை சுமார் 10 மணியளவில் நானும் எனது மச்சான் பிரதீப்குமாரும் ஒரு வாகனத்திலும் முகேஷ் மற்றும் அவரது அம்மா ஒரு வாகனத்திலும் முகேஷ் வீட்டின் பால் காய்ப்பிற்கு பத்திரிக்கை கொடுப்பதற்காக இடுவாய் பாரதிபுரத்தில் இருந்து பட்டணம் செல்வதற்காக பாப்பம்பட்டி பிரிவு அருகே சென்று கொண்டிருந்த பொழுது திருப்பூரில் இருந்து கோவை நோக்கி வந்த லாரி முகேஷ் வாகனத்தின் மீது மோதி விட்டது. முகேஷ் சாலையின் இடது புறமாக விழுந்து விட்டார். முகேஷ் அம்மா லாரியின் வலது புறமாக விழுந்து விட்டார். லாரியின் பின் சக்கரம் முகேசின் அம்மாவின் தலை மீது ஏறிவிட்டது.

2. அய்யம்மாள் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் முகேஷிற்கு கை மற்றும் உடலில் சிறாய்ப்பு காயங்கள் ஏற்பட்டது. உடனடியாக சம்பவ இடத்திலிருந்து ஆம்புலன்ஸ் மூலமாக

பிரேதத்தை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து காவல் நிலையம் நானும் பிரதீப் மற்றும் முகேஷ் மூன்று பேரும் வந்து முகேஷ் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். லாரியின் பதிவு எண் ஞாபகம் இல்லை. லாரியின் ஓட்டுநரை பார்த்தால் என்னால் அடையாளம் காண இயலாது. லாரியில் அப்பொழுது ஓட்டுநர் இல்லை. பின்னர் அய்யம்மாள் பிரேதத்தின் மீது போலீசார் பிரேத விசாரணை செய்தபோது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. சம்பவத்தில் இறந்த அய்யம்மாள் எனது அண்ணி என்றால் சரிதான். முகேஷ் எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். இடுவாயிலிருந்து எத்தனை மணிக்கு கிளம்பினோம் என்றால் காலை சுமார் 07.15 முதல் 07.30 மணிக்குள்ளாக கிளம்பினோம். சம்பவ இடம் வந்த பொழுது மணி சுமார் 10 இருக்கும் என்றால் 9:30 முதல் 10.00 மணிக்குள்ளாக இருக்கும். சம்பவ தினம் ஞாயிற்றுக்கிழமை என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஒன்றாக கிளம்பினோமா என்றால் அவர்கள் முன்னால் கிளம்பினார்கள், நாங்கள் பின்னால் வந்தோம். முகேஷ் கிளம்பி சுமார் பத்து நிமிடத்திற்குள் நாங்களும் கிளம்பினோம். ஆனால் சம்பவ இடத்தில் இருவரும் ஒன்றாக தான் வந்தோம். நாங்கள் என்ன வாகனத்தில் வந்தோம் என்றால் பல்சர் வாகனத்தில் வந்தோம்.

2. நான் மட்டும் வாகனத்தில் வந்தேன் என்றால் சரியல்ல பிரதீப் குமாரும் வந்தார். சம்பவம் நடந்த சுமார் 1/2 மணி நேரத்திற்குள் காவல் நிலையம் வந்து புகார் அளித்தோம். சம்பவ இடத்திற்கு ஆம்புலன்ஸ் எப்பொழுது வந்தது என்றால் உடனடியாக வந்து விட்டது. ஆம்புலன்சிற்கு யார் தகவல் சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது. தனியார் ஆம்புலன்ஸ் வந்தது. என்னை போலீசார் விசாரித்த பொழுது நான் என்ன வாகனத்தில் வந்தேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுமக்கள் அதிக அளவில் சம்பவம் ஆனவுடன் கூடி விட்டார்கள் என்றால் சரிதான். சம்பவ இடமானது பாப்பம்பட்டி சிக்னல் அருகே என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல் விபத்து சம்பவத்தை நான் பார்க்கவில்லை என்றும் பின்னர் விபத்து குறித்து தெரிந்து தான் வந்தேன் என்றால் சரியல்ல.

3. நாங்கள் லாரியின் பின்னால் இடதுபுறத்திலா அல்லது வலது புறத்திலா அல்லது நடுப்பகுதியில் வந்து கொண்டிருந்தோமா என்றால் சம்பவத்தை பார்க்கக்கூடிய இடத்தில் வந்து கொண்டிருந்தோம். விபத்து சத்தம் கேட்டு தான் விபத்து ஏற்பட்டுள்ள விபரம் எங்களுக்கு தெரியவந்தது என்றால் சரிதான். சம்பவத்தில் இறந்தது எனது அண்ணி என்பதாலும் முகேஷ் எனது அண்ணன் மகன் என்பதாலும் அவர்கள் கொடுத்த புகாருக்கு ஆதரவாக பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.06 15:03:51 +0530

<u>மறுவிசாரணை</u> இல்லை

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்**